

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து, வாள்வீச்சு வீராங்கனை செல்வி பி. சசிபிரபா தென்கொரிய நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான வாள் வீச்சு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு, போட்டிக்கான நுழைவுக் கட்டணம் மற்றும் போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,00,000/–க்கான காசோலையினை வழங்கினார். உடன் இளைஞர் நவன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) எகிப்து நாட்டில் நடைபெறும் சர்வதேச பாரா பேட்மின்டன் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள ஜெகதீஷ்டில்லிக்கு, நுழைவுக் கட்டணம் உட்பட செலவினத் தொகை ரூ.1,79,000/–க்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து வருகிற 01.12.2024 முதல் 08.12.2024 வரை மலேசியாவில் நடைபெறவுள்ள 10வது ஆசிய பசிபிக் காது கேளாதோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,20,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அ.நடராஜன் தலைமை! அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார்!

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. -தங்க.சித்தார்த் - ஏ.கே.அருண் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ. 18 -

பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வரவேற்புரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த், ஏ.கே.அருண் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அழகு.நீலமேகம், பட்டுச்செலவி ராஜேந்திரன்,மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய பெருந்தலைவர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, க.ராமலிங்கம், மீனா அண்ணாதுரை,பிரபா செல்லப்பிள்ளை, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துலகரீம், வ.சுப்ரமணி யன், மா.பிரபாகரன்,

டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாஹிர் உசேன், பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ், வள்ளியம்மை ரவிச்சந்திரன், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், துணைத் தலைவர் சரண்யா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது,

மாவட்ட அமைப்பு விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளரும் அரசு குற்றவியல் வழக்கறிஞர் பா.செந்தி ல்நாதன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர். முத்தரசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்மேகம், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச.மாவட்ட கவுண்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர்கள் சி.காட்டுராசா, ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம்,

நகர் மன்ற உறுப்பினர்கள் பாரி(எ)அப்துல்பாரூக், ரகமத்துல்லா, நல்லுசாமி,

கொளக்காநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் என்.ராகவன்,

மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்ததுச்செல்வன், வனிதாசுப்ரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரா.சிவா, அன்புச்செல்வன், ஆர்.கணேசன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர் நன்றியுரையாற்றினார்.

இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

நவம்பர் 15, அன்று பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தரும், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும், அனைத்து நிலை நிர்வாகிகளும் திரளாக கலந்து கொள்வது எனவும், துணை முதலமைச்சராக பதவியேற்று திருச்சி செல்லும் வழியில், முதல் முறையாக பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் மாண்புமிகுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்லையில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும்,

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27, அன்று மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும்,

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்,நீக்குதல் முகாம் நடைபெற்று வருகிறது.இதில் BLA2, மற்றும் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு, இறந்தவர்களின் பெயர்களை நீக்கியும், புதிய வாக்காளர் பெயர்களை சேர்க்க வேண்டும் எனவும்,

வருகிற 2026, சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பது எனவும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், பாடாலூர் கிளை கழகச் செயலாளர் துரைசாமி மறைவிற்கும், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம்,திருவாளந்துறை ஒன்றிய குழு உறுப்பினர் சுமதி கணவர் மணிவண்ணன் மறைவிற்கும்,

தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம் மனைவி செல்வவசந்தி மறைவிற்கும், டாஸ்மார்க் தொ.மு.ச.மாவட்ட செயலாளர் மதியழகன் தந்தை செல்லபெருமாள் மறைவிற்கும்,

பெரம்பலூர் முன்னாள் நகர செயலாளர் பழனியப்பன் மனைவி தமிழரசி மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு

# இலவச அறுவை சிகிச்சை செய்ய சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி!



சென்னை, நவ.18 -

**கண் அழுத்த நோய் உள்ளிட்ட பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.**

அதன் ஒரு பகுதியாக, பார்வை திறன் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள சென்னை அகர்வால் கண் மருத்துவமனைக்கு சன் டி.வி. 75 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை அகர்வால் கண் மருத்துவமனை நிர்வாகிகள் டாக்டர்கள் சவுந்தரி, சுதா, திரிவேணி ஆகியோரிடம் சன் டி.வி. சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் வழங்கினர். இந்த நிதியின் மூலம் ஏழைகளுக்கு இலவச சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று அகர்வால் கண் மருத்துவமனை மண்டல மருத்துவ இயக்குனர் டாக்டர் சவுந்தரி தெரிவித்தார். ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும், சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

சன் டி.வி. மற்றும் சன் பவுண்டேஷன் இதுவரை அளித்த நிதி உதவிகள் மூலம் அகர்வால் கண் மருத்துவமனையில் 8,603 பேருக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### என்.கௌதமன், உ.மதிவாணன் பங்கேற்பு!

# நாகை, வேளாங்கண்ணியில் மாணவர் விடுதிகள் ஆய்வு!

### அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் மேற்கொண்டனர்!

நாகை, நவ. 18 .

நாகை மாவட்டத்தில் டாப்செட்கோ திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளிடமும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் நாகை அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதியிலும், வேளாங்கண்ணி அரசு மாணவியர் விடுதியிலும், பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் செயல்பட்டுவரும் நாகப்பட்டினம் அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதியிலும், வேளாங்கண்ணி அரசு மாணவியர் விடுதி யிலும், பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்தும், சமையல் அறை மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் மாணவர்களுக்கு வழங்;கப்படும் உணவின் தரம், தளவாடப்பொருட்கள்(பாய், போர்வை, நூலகம், சீருடை, பராமரிப்பு செலவினத்தொகை) குறித்தும், விடுதியின் பயன் குறித்தும் மாணவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும் விடுதி காப்பாளர் மற்றும் பணியாளர்களிடம் விடுதி பாதுகாப்பு, பராமரிப்பு பணிகள் குறித்தும் கேட்டறிந்தனர். அதைத் தொடர்ந்து நாகை மாவட்டத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக(டாப்செட்கோ) திட்டத்தின் மூலம் ரூ.51,00,000 கடன் பெற்ற மகளிர் சுய உதவி குழு பயனாளியின் தொழில் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி நாகை தெத்தி சிவன் கோவில்தெரு தெற்கு பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் சன்பிளவர் மகளிர் குழுவில் உள்ள பயனாளிகள் டாப்செட்கோ திட்டத்தின் கீழ் ரூ.60,000 மதிப்பில் குழுக்கடன் பெற்று செங்கல் சூளை தொழில் செய்துவரும் பயனாளியிடமும், ரூ.60,000 மதிப்பில் குழுக்கடன் பெற்று சமையல் பாத்திரங்கள் வாடகை தொழில் செய்துவரும் பயனாளியிடமும், ரூ.60,000 மதிப்பில் குழுக்கடன் பெற்று மாடு வளர்ப்பு தொழில் செய்து வரும் பயனாளியிடமும், ரூ.60,000 மதிப்பில் குழுக்கடன் பெற்று கட்டுமான பணியில் சென்டிரின் பொருட்கள் வாடகை தொழில் செய்துவரும் பயனாளியிடமும் திட்டங்களின் பயன்கள் குறித்தும் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் பார்வையிட்டு கேட்டறிந்தனர்.

இந்த ஆய்வின்போது நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், த தாட்கோ தலைவர் .உ.மதிவாணன், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷாநவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. நாகை மாலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இல. மேகநாதன், க. ராஜேந்திரன், ப.கோவிந்தராஜன், க. மறைமலை, மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி. காமராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், பொருளாளர் மு.லேக நாதன், ஒன்றிய கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன், மகா.குமார், சிக்கல் என் ,ஆனந்த், ஆர்.டி.எஸ்.சரவணன், கே.பழனி யப்பன் ஆ. தாமஸ்ஆல்வஎடிசன், சோ.பா. மலர்வண்ணன், உதயம் வே.முருகை யன், நகரக் கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ் .ஈ.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோசி. குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் .உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் கௌசல்யா இளம்பரிதி, வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் அ.டாயானா ஷர்மிளா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் க.ரேணுகாதேவி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பெரம்பலூர் மாவட்டம், கிருஷ்ணாபுரம், பூலாம்பாடி, கள்ளப்பட்டி சாலை இடை வழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள சாலையின் தரம் குறித்து திடீர் ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், நெடுஞ்சாலைத்துறை தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் சந்திரசேகர், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சத்திய பிரகாஷ், கண்காணிப்பு பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) விழுப்புரம் செந்தில்குமார், செந்தில், கலைவாணி, திருவருள், பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், சன்.சம்பத், எஸ்.நல்லதம்பி, க.ராமலிங்கம் மற்றும் எஸ்.அழகுவேல்,ரா.சிவா ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழகத்தில் ஆறு மாத குழந்தை மற்றும் எடை குறைவாக உள்ள குழந்தைகளுக்கு தமிழக முதல்வர் அவர்களின் சிறிய ஏற்பாட்டில் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது மேலும் இதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவெறும்பூர் வட்டார சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் தறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகளின் சார்பாக துவாக்குடி நகராட்சிக்குட்பட்ட வடக்கு மலை பகுதியில் புதிதாக அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் திருவரம்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமையில் சுமார் 150 குழந்தைகளின் தாய்மார்களின் மூலம் அரசு வழங்கும் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது இதில் கடுமையாக எடை குறைவாக உள்ள குழந்தைகளுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகமும் மீதமுள்ள 94 குழந்தைகளுக்கு ஒரு ஊட்டச்சத்து பெட்டகமும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் துவாக்குடி நகர் மன்ற தலைவர் காயாம்பு, மாவட்ட திட்ட அலுவலர் நித்தியா மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் விஜயலட்சுமி ,குழந்தை வளர்ச்சி வட்டார அலுவலர் சாய்ராபானு உட்பட ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர் .